


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.6.2023) முகாம் அலுவலகத்தில், புதுடெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பின்போது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, டெல்லி கல்வி அமைச்சர் திருமதி அடிஷி மர்லினா, கனிமொழி கருணாநிதி எம்.பி., சஞ்சய் சிங், ராகவ் செதா ஆகியோர் உடனிருந்தனர்.

# கலைஞர் அதிகாரம்!



ஆயிரம் ஆரியமும் இழிகொண்டார் மொழித்
திணித்தும்
தீராது கலைஞரின் தமிழ்

ஊழ்வினையும் வேதக் கடும்பிணியும்
சூழ்வினையும்
வீழாதாள் கலைஞரின் பெண்

எண்ணும் எழுத்தும் கண்ணல்ல பகுத்தறியும்
பண்பே கலைஞர்க்கு விழி

பிறப்பால் தாழ்வதொழிய கலைஞர் கல்வியெனும்
சிறப்பால் விடுதலை தந்தார்

மாற்றுத் திறனாளிப் பெயராகி மலர்ந்ததுவே
காற்றின் ஊனம் களைந்து

வானமும் ஆள்வதற் குரியதாயினும் கலைஞர்க்கு
மாநில உரிமையே உயிர்

உழவர் மேம்பட புழுவும் புன்முறுவ
விளையும் கலைஞரின் நெல்

தேடல் புதுப்பிக்க தொழில்நுட்பத் தமிழ்பூக்க
டைடல் கலைஞரின் கல்

பரபரக்கும் வாழ்வினூடே கடற்கரைச் சாலைகண்
கரகரக்கும் கலைஞர் குரல்

எத்திசை யார்யார் தோன்றிபின் மறைந்தழிந்தும்
கிழக்கோடு கலைஞர் முகம்

**கபிலன் வைரமுத்து**


# எனது ஐபோன் ஒட்டுக் கேட்கப்படுகிறது!

## ராகுல் காந்தி பேச்சு!

கலிபோர்னியா, ஜூன் 3-

எம்.பி.பதவியில் இருந்து நீக்கப்பட்டது, மக்களுக்கு சேவை புரிய தனக்கு அளிக்கப்பட்ட பெரும் வாய்ப்பு” என ராகுல்காந்தி கூறினார் ஒருவார சுற்றுப்பயணமாக அமெரிக்கா சென்று உள்ளார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி. இந்த பயணத்தின் போது தொழில் முதலீட்டாளர்கள், அமெரிக்க வாழ் இந்தியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரை சந்தித்து வருகிறார். இதில் நேற்று முன்தினம் அமெரிக்காவின் ஸ்டான்ட்போர்டு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்திய மாணவர்களிடையே ராகுல்காந்தி உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது: 2000 ஆம் ஆண்டு முதன்முதலாக அரசியலில் நுழைந்தபோது தகுதி நீக்கம் போன்ற கடுமையான தண்டனைகள் எல்லாம் சாத்தியமில்லை எனக் கருதினேன். ,ஆனால் தற்போது அதனை நிகழ்கால யதார்த்தமாக கண் முன்னே பார்த்து வருகிறேன்.



**கற்பனையில் கூட நினைத்ததில்லை!**

பதவியில் இருந்து நீக்கப்பட்டது, மக்களுக்கு சேவை புரிய தனக்கு அளிக்கப்பட்ட பெரும் வாய்ப்பு” என ராகுல்காந்தி கூறினார் எம்.பி. பதவியிலிருந்து தாம் தகுதி நீக்கம் செய்யப்படுவோம் என்று கற்பனையில் கூட நினைத்ததில்லை. எம்.பி. பதவியில் இருந்து நீக்கி எனக்கு அளிக்கப்பட்ட தண்டனையானது, மக்களை சந்திப்பதற்கும் மக்களுக்கு சேவையாற்றுவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளதாக கூறிய அவர் உண்மையிலேயே இது மிகப்பெரிய வாய்ப்பு எனவும் இந்த வழியில் தான் தற்போதைய அரசியல் செயல்படுவதாகவும் கூறியுள்ளார்.

மேலும், இந்த பிரச்சினைகள் 6 மாதங்களுக்கு முன்னரே தொடங்கியதாக கூறிய அவர், பெரும் நிதி ஆதிக்கமும் நிறுவன கட்டமைப்பும் நாட்டை ஆண்டு வருகிறது. ஒட்டுமொத்த எதிர்கட்சிகளும் இந்தியாவில் ஒன்று சேர்ந்து போராடி வருகின்றன. அவதூறு வழக்கில் அதிகபட்ச தண்டனை பெற்று மக்களவையில் இருந்து நீக்கப்பட்ட முதல் நபர் நான் தான் என அவர் குறிப்பிட்டார்.

ராகுல் காந்தி சிலிக்கான் பள்ளத்தாக்கு சார்ந்த ஸ்டார்ட்அப் தொழில் அதிபர்களுடன் நேரத்தை செலவிட்டார். அப்போது தனது ஐபோன் ஒட்டு கேட்கப்படுவதாகவும், அதைப் பற்றி கவலைப்படவில்லை என்றும் கூறினார். அவர் தனது ஐபோனில் “ஹலோ! மிஸ்டர் மோடி” என்று நகைச்சுவையாக பேசினார். மேலும் ஒரு தேசமாகவும் ஒரு தனிநபராகவும் தகவலின் தனியுரிமை தொடர்பாக உங்களுக்கு நிறுவப்பட்ட சட்டங்கள் தேவை என கூறினார்.

### உயர்ந்த கலாச்சாரமும் பாரம்பரியச் சிறப்பும் கொண்ட

# தமிழ்நாட்டில் பணிபுரிவதை பெருமையாகக் கருதுகிறேன்!

## சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதி கங்கா பூர்வாலா பேச்சு!

சென்னை, ஜூன் 3 -

தமிழ்நாட்டின் மிக உயர்ந்த கலாச்சாரம், பாரம்பரியத்துடன் இணைந்து உங்களில் ஒருவராகப் பணியாற்றுவேன் என்று சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதி கூறினார்.

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த முனீஸ்வர்நாத் பண்டாரி கடந்த ஆண்டு ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, பொறுப்பு தலைமை நீதிபதிகளாக எம். `துரைசாமி, டி.ராஜா ஆகியோர் அடுத்தடுத்து பதவிவகித்தனர். பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா அண்மையில் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக மும்பை உயர்நீதிமன்றத்



தின் பொறுப்பு தலைமை நீதிபதி எஸ்.வி.கங்கா பூர்வாலா நியமிக்கப்பட்டார். இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக பதவி ஏற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் அவருக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் காலை வரவேற்பு. நிகழ்ச்சி நடத்தப்பட்டது. புதிய தலைமை நீதிபதியை வரவேற்று அட்வகேட் ஜெனரல் ஆர்.சண்முகசுந்தரம், பார் கவுன்சில் தலைவர் பி.எஸ். அமல்ராஜ், வக்கீல் சங்கதலைவர்கள் ஜி.மோகன் கிருஷ்ணன் உள்ளிட்டோர் பேசினர்.

இந் நிகழ்ச்சியில் புதிய தலைமை நீதிபதி எஸ்.வி.கங்கா பூர்வாலா பேசியதாவது:-

தமிழ்நாடு நீதித்துறை ஏராளமான சட்ட அறிஞர்களையும், சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதிகளையும், நீதிபதிகளையும், ஐகோர்ட்டு நீதிபதிகளையும் உருவாக்கி உள்ளது. அப்படிப்பட்ட உயர்ந்த நீதித்துறையில் நான் பணியாற்றுவதை பெருமையாகக் கருதுகிறேன். பெர்சியாவில் இருந்து பார்சி மக்கள் குஜராத் கடற்கரையில் வந்து இறங்கினார்கள். அப்போது, அங்கு ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னர், ஒரு டம்ளர் நிறைய பாலை ஊற்றி அதைக் காட்டி, உங்களுக்கு இங்கு இடம்இல்லை என்று பார்சி மக்களிடம் கூறினார்.

உடனே அந்த பார்சி மக்களின் தலைவர் ஒரு ஸ்பூன் சர்க்கரையை எடுத்து பாலில் கலந்து, பாலுடன் கலந்த சர்க்கரை போல உங்களுடன் நாங்கள் ஒருங்கிணைந்து வாழ்வோம் என்றார். அதுபோல தமிழ்நாடு மிக உயர்ந்த கலாச்சாரமும், பாரம்பரியமும் கொண்டது. கலாச்சாரம், பாரம்பரியத்துடன்இணைந்து உங்களில் ஒருவராக இந்தமாநிலத்தில் பணியாற்றுவேன்.

இவ்வாறு தலைமை நீதிபதி கங்கா பூர்வாலா பேசினார்.

# தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளை முடக்க முயல்வது நியாயமற்றது!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜீன் 3 -

தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளை முடக்க முயல்வது நியாயமற்றது என்று ‘தீக்கதிர்’ நாளேடு 2,6,2023 தலையங்கம் தீட்டியுள்ளது.

அது வருமாறு:-

சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி, திருச்சி கி.ஆ.பெ.விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி ஆகியவற்றின் இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான அங்கீகாரத்தை ரத்து செய்திருப்பதாக தேசிய மருத்துவ ஆணையத்தின் இளநிலை மருத்துவக் கல்வி வாரியம் அறி வித்திருப்பது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

இதனால் 2023 24 ஆம் கல்வியாண்டின் ஐநூறு எம்பிபிஎஸ் படிப்புக்கான இடங்கள் பறிபோ கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

போதிய பேராசிரியர்கள் இல்லாதது, சிசிடிவி கேமரா இல்லாதது, ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்ட பயோமெட்ரிக் வருகை பதி வேடு இல்லாதது போன்றவை அங்கீகாரம் ரத்துக்கான காரணங்களாகக் கூறப்ப ட்டுள்ளன.

தமிழ்நாடு சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியம் தமிழக



தீக்கதிர்

2023 ஜூன் 02 வெள்ளிக்கிழமை

ஏன் இந்த அவசரம்?

சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி, திருச்சி கி.ஆ.பெ.விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி ஆகியவற்றின் இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான அங்கீகாரத்தை ரத்து செய்திருப்பதாக தேசிய மருத்துவ ஆணையத்தின் இளநிலை மருத்துவக் கல்வி வாரியம் அறிவித்திருப்பது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

இதனால் 2023 - 24 ஆம் கல்வியாண்டின் ஐநூறு எம்பிபிஎஸ் படிப்புக்கான இடங்கள் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

போதிய பேராசிரியர்கள் இல்லாதது ...

மருத்துவக் கல்வி இயக்குநரக குழு தில்லி சென்றுள்ளதாகவும், உரிய விளக்கங்கள் அளிக்கப்படும் என்றும் கூறியுள்ளார். பேராசிரியர்கள் பற்றாக்குறைதான் அங்கீகார ரத்துக்கு காரணம் என்று கூற முடி யாது என்றும், சிசிடிவி கேமரா இல்லை என்பன போன்ற சிறிய காரணங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றும் கூறியுள்ளார்.

தமிழக அரசு இந்த விசயத்தில் அவசரமாக தலையிட்டு மூன்று கல்லூரிகளிலும் வரும் கல்வியாண்டுக்கான எம்பிபிஎஸ் படிப்புக்கான இடங்களை உறுதி செய்ய வேண்டும். இந்த மூன்று கல்லூரிகளில் மட்டுமின்றி தமிழகம் முழு வதும் உள்ள அரசு கல்லூரிகளில் பேராசிரியர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இந்தியாவிலேயே அரசு மருத்துவக் கல்லூரிகளை அதிகமாக கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இது பாராட் டுக்குரியது.

ஆனால் அதே நேரத்தில் மருத்துவக் கல்வித் தரத்திலும் தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்பதை உறுதி செய்ய வேண்டும். உரிய கட்டமைப்பு வசதிகள், கற்பிக்கும் வசதிகள் முழுமையாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

அதே நேரத்தில் தேசிய மருத்துவ ஆணையத்தின் இளநிலை மருத்துவக் கல்வி வாரியத்தின் நடவடிக்கை பொருத்தமானதாக இல்லை. குறைகள் சரி செய்யப்பட வேண்டும் என் பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடி யாது. ஆனால் புகழ் பெற்ற ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி உள்பட மூன்று கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு தடை விதிப்பதை ஏற்க முடியாது.

ஏராளமான தனியார் மருத்துவக் கல்லூரி கள் எந்த விதிமுறைகளையும் பின்பற்றாமல், கல்லூரிகளை நடத்தி வருவதோடு, வகை தொகையில்லாமல் கொள்ளையடிக்கின்றனர். இதைத் தடுக்க தேசிய மருத்துவ ஆணையம் எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரிய வில்லை. மதுரையில் துவக்குவதாக அறி விக்கப்பட்ட எய்ம்ஸ் மருத்துவமனை தரையில் போட்ட கல்லாக கிடக்கிறது. மறுபுறத்தில் தமிழக மருத்துவக் கல்லூரிகளை முடக்க முயல்வது நியாயமற்றது.

இவ்வாறு ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.

### திருவள்ளூர் மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர்

# முன்னாள் நகர்மன்றத் தலைவர் தி.வ.விஸ்வநாதன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜீன் 3-

திருவள்ளூர் மாவட்ட கழக முன்னாள் துணைச் செயலாளரும், முன்னாள் நகர்மன்றத் தலைவருமான தி.வ.விஸ்வநாதன் அவர்கள் நேற்று மறைவுற்ற செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திருவள்ளூர் மாவட்ட முன்னாள் துணைச் செயலாளரும், முன்னாள் நகர்மன்றத் தலைவருமான தி.வ.விஸ்வநாதன் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

அவரது பிரிவால் வாடும் கழக உடன்பிறப்புகளுக்கும், குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# பெம்மானைப் பாடுதும்; அம்மானை ஆடுதும்!

திருக்குவளை பிறந்தவனை,
செங்கழனி விளைகின்ற
திருவாரூர் வளர்ந்தவனை,
செந்தமிழ்க் கொடியேந்தித்
தெருமுழங்கி நடந்தவனை,
திரைபோட்டே இந்திப்பெண்
வருங்கொடுமை
எதிர்த்தவனை
வாதாடி எழுந்தவனை,
செருவுக்கும் அஞ்சானை,
சிறைசெல்லத் தயங்கானை
அரும்பாக இருக்கையில்
அலராக மணந்தவனை
இருபதும் நிரம்பாமுன்
இளமைபலி வரைந்தவனை,
குருத்திலே கொற்றவனைக்
கூறுதும்காண் அம்மானை!

இரும்பான உளத்தவனை
இயக்கத்தில் உயிர்த்தவனை,
கரும்பாக மொழிந்தவனை,
காலம்பொன் என்றவனை,
சுரும்பாகப் பறந்தவனை,
சொன்னதைச் செய்தவனை,
துரும்பாக நினைத்தவர்முன்
தூணாக நின்றவனை
இரவுபகல் எப்போதும்
இயக்கத்திற்கு உழைத்தவனை
புரிநூலார் கட்டிய
பொய்மூட்டை அவிழ்த்தவனை
வரிகளில்தீப் பொரிகளை
வளர்த்திட்ட வல்லவனை,
பரம்பொருள் கருதானைப்
பாடுதும்காண் அம்மானை!

கருவிலே தமிழ்கொண்டான்
கலையிலே கரைகண்டான்
உருவிலே அழகுற்றான்
உணர்ச்சியில் அளவற்றான்
செருவிலே களங்கொண்டான்
செம்மொழிப் புகழ்கொணர்ந்தான்
திருக்குறள் மனங்கொண்டான்
செம்மாந்த இனம்கண்டான்
கரிகாலன் வழிவந்தோன்
காவிரி கைக்கொண்டான்
பெரியாரின் பின்நின்று
பேரறிஞர் அண்ணாவின்
சரியான வழிசென்று
தலைமையும் ஏற்றவனை,
பரிவாக யாம்ஆடிப்
பாடுதும்காண் அம்மானை!

பெருஞ்சாதி ஆதிக்கம்
பிடுங்கியே எறிந்தவனை
இருட்சாதி ஒழிக்கவே
எப்போதும் முயன்றவனை
வரும்பொருள் உரைத்தவனை
வசைமொழி பொறுத்தவனை,
திரும்பிப்பார் செல்லுமுன்
சிங்கம்போல் என்றவனை,
விரும்பிச்செய் கடமையே
விழைந்திடு கண்ணியம்
அருங்கட்டுப் பாடுதான்
அகங்கொள்ளச் சொன்னவனை
அருந்துநீர் போன்றவனை
அறம்வெல்லும் என்றவனை
இருந்தாடி யாமிங்கே
ஏத்துதும்காண் அம்மானை!

கருந்தாரைக் கையேந்திக்
களங்கபுரம் டால்மியா
பொருந்தாதென் றழித்தவனை,
புறப்பட்ட ரயில்முன்னே
வருந்தாமல் தலைவைத்து
மறவனாய்ப் படுத்தவனை,
பெருந்தீதாம் இந்திப்பேய்



பிடித்திடின் நமையென்று,
திருந்தாத தில்லிக்குத்
தீயச்சம் தந்தவனை,
கருந்தேளும் கொடும்பாம்பும்
கடுங்கட்டாந் தரையுமே
இருந்தாளும் தனிச்சிறையில்
எஃகாக இருந்தவனைப்
புரந்திங்கே யாம்ஆடிப்
புகலுதும்காண் அம்மானை!

பதின்மூன்று தேர்தலில்
பகைத்தவரை வென்றானை
உதிரந்தான் போனாலும்
உரிமைக்கு நின்றானை
அதிரத்தான் முழங்கியே
அனைத்தூரும் சென்றானை,
எதிர்த்தாலும் அணுவளவும்
இலக்கிலே குன்றானை
விதித்தாலும் தடைபல
வேழமாய் முறித்தானை,
சதிபல செய்தோரின்
தந்திரம் பறித்தானை,
குதிரைபோல் பாய்வதைக்
கொஞ்சமும் நிறுத்தானை,
துதித்தாரைப் பொறுத்தானைச்
சொல்லுதும்காண் அம்மானை!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

அண்ணாதான் மறைந்தபின்
அவலந்தான், இவ்வியக்கம்
மண்ணாகப் போகுமென
மனப்பாலைக் குடித்திருக்க,
எண்ணாத உயரத்தில்
ஏறியே ஒளிர்ந்தவனை,
கண்ணாக ஆட்சியும்
கழகமும் காத்தவனை,
உண்ணாமல் உறங்காமல்
ஓயாமல் உழைத்தவனை,
பெண்கட்குச் சொத்துரிமை
பேறுபல அளித்தவனை,
பண்பட்ட அரசியலில்
பாண்டியன் ஆனவனைப்
பண்கூடி விளையாடிப்
பாடுதும்காண் அம்மானை!
நாடகத்தில் திரைப்படத்தில்
நவின்றபல கருத்துகளால்
ஈடற்ற இயக்கத்திற்கு
எழுச்சியினைத் தந்தவனை,
கேடற்ற படைப்புகளால்
கிளர்ச்சியை வளர்த்தவனை
ஏடற்ற மக்களிடம்
எண்ணத்தை விதைத்தவனை,
கூடற்ற பறவைகட்குக்
கூடுகள் கொடுத்தவனை
நாடற்ற தமிழர்க்கு
நற்காப்பும் எடுத்தவனை,
பீடற்ற இந்திமொழிப்
பெருந்திணிப்பைத் தடுத்தவனைப்
பாடுபல பட்டவனைப்
பாடுதும்காண் அம்மானை!
பைந்தமிழ் நாட்டிற்குப்
பகலவன் ஆனவனை,
ஐந்துமுறை முதல்வராய்
ஆட்சியில் அமர்ந்தவனை,
மைந்தனைத் தலைவனாய்
மலர்ந்திடச் செய்தவனை
நைந்திடாது தமிழ்நாடு
நன்னிலைக்கு உயர்த்தினானை,
செந்தமிழை உலகேற்கச்
செம்மொழி ஆக்கினானை
வந்தமொழி எதுவெனினும்
வால்நறுக்கி விட்டவனை
வந்தித்தே யாம்ஆடி
வழங்குதும்காண் அம்மானை!

மூன்றெழுத்து அண்ணா
முன்கண்ட கழகமாம்
மூன்றெழுத்து தி மு க,
மூவேந்தர் ஒன்றிணைந்து
தோன்றிடும் இயக்கமாய்த்
துலங்குமெனச் சொன்னவனை
ஊன்றுகோல் மட்டுமல்ல
உரிமைக்கோல் உறவுக்கோல்
சான்றுகோல், எதிரிகளைத்
தாக்குங்கோல், வீரத்தை
ஈன்றகோல்,தமிழரை
இணைக்குங்கோல்
இயக்குங்கோல்
நோன்றகோல் போல்வலிமை
நூறுநூறு நுவன்றவனை
மூன்றிள மங்கையர்யாம்
மொழிகுதும்காண்
அம்மானை!

அன்றும்உன் எழுதுகோல்
ஆக்கிய படைப்புகளால்
பொன்றிய எதிர்ப்புகள்
பொடிப்பொடியாய்ப்
போனதுபோல்
இன்றும்உன் எழுதுகோல்
எழும்அலை கடலிடை
நின்றுயர வானோக்கி
நிறுவினால் எதிர்த்திட
ஒன்றிரண்டு பேர்வழிகள்
ஓரெழுத்தும் எழுதறியார்
மென்றிருப்பார் , கூலிக்கு
மேலடிப்பார் வாயடிப்பார்!
பன்றிகள் எனக்கூறப்
பண்பாடு தடுக்கிறதே
நன்றிதான் இருந்தாலோ
நாவுந்தான் தடுக்காதே!
என்றுதான் திருந்துவரோ
ஈனரின் ஈனர்கள்!
குன்றுதான் குலுங்காது;
குறுநரி ஊளைகள்
குன்றித்தான் போகுமே;
குரல்வற்றிச் சாகுமே!

என்றும்போல் நூறாண்டும்
எழுந்ததே கொண்டாட!
ஒன்றுபோல் கூடுவோம்
உயர்அருமை பாடுவோம்
குன்றுயர ஆடுவோம்
குலநலம் நாடுவோம்
சென்றுயரும் வானம்போல்
திகழுமுன் புகழெங்கும்!
கன்றிள மங்கையர்யாம்
களித்துமகிழ்ந்து ஆடியே
வென்றுயர்ந்த கலைஞராம்
வித்தகப்
பெம்மானை
நன்றுய்ய என்றென்றும்
நவிலுதும் அம்மானை!